Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 02, 2024

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 02, 2024 | ஒளி: 09 கதிர்: 225 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# “கல்முனை வடக்கு தமிழர்களின் பிரதேசம்”



கல்முனை வடக்கு பிரதேச செயலத்தை இயங்க விடாது தடுப்பது அந்த மக்களின் மனித உரிமைகளை மீறும் செயல். ஆகவே, அந்த மக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்திய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யான சிவஞானம் சிறிதரன், கல்முனை வடக்கு தமிழர்களின் பிரதேசம். சுயமான, சுதேசிய தமிழ் மொழியை பேசுகின்றவர்கள் அவர்கள் என்ற காரணத்தினால்தான் அதனை பறிக்க முற்படுகின்றார்களா எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (01) இடம்பெற்ற ஆயுர்வேத சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை காப்பாற்றுங்கள் என்று கடந்த 25ஆம் திகதியிலிருந்து இன்று வரை (நேற்று ) 8 நாட்களாக மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி P2



## வரியை நீக்கினால் கேக் 400 ரூபாவாகும்

முட்டை ஒன்றின் விலை 35 ரூபாயாக குறைப்பதன் மூலமும், பட்டருக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை அகற்றுவதன் மூலமும் ஒரு கிலோ கிராம் கேக் 400 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

வித்யா வன்புணர்ந்து படுகொலை

## மரண தண்டனை கைதி மரணம்

யாழ்ப்பாணம், புங்குடுதீவு பிரதேசத்தில் பாடசாலை மாணவியான வித்யா, கூட்டு பாலியல் வன்புணர்வு உட்படுத்தப்பட்ட நிலையில், படுகொலை செய்யப்பட்டார். அந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நபர், பல்லேகல தும்பற சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்தார்.

தொடர்ச்சி P2

## ஞானசாருக்கு கடூழிய சிறை: பௌத்தர்களுக்கு வேதனை



ஞானசார தேரருக்கு நீதிமன்றத்தினால் 4 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பௌத்தர்களுக்கு மனவேதனையளித்தால் அது இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்துமென எச்சரித்த சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல்,

தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்

## சூத்திரதாரி யார்?



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக செயல்பட்டவர்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி தெளிவான அறிவிப்பு மூலம் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், இது குறித்து நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வளவு பெரிய குற்றத்திற்கு காரணமான நபர்கள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தாததற்கான காரணங்களை அறிய விரும்புவதாகவும், இந்த பிரச்சினைகளுக்கு இன்றைய தினமே பதில் தேவை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## குவைட் முதலாளியுடன் மனைவி கும்மாளம்

### கணவனுக்கு ஆத்திரம்: வீட்டுக்கு தீ வைத்து கொளுத்தினார்

குவைட்டில் பணிபுரிந்த பெண்ணொருவர் தனது முதலாளி மற்றும் சாரதியுடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்துள்ளார். அவ்விருவரும் அந்தப் பெண்ணின் வீட்டிலேயே தங்கியும் உள்ளனர்.

இதனால், மனைவிக்கும் கணவனுக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டது. கடும் சண்டையும் ஏற்பட்டுள்ளது. பொறுமை இழந்த கணவன், மனைவியைத் தாக்கியுள்ளார்.

சனிக்கிழமை (30) வீட்டிற்குத் தீயும் வைத்துள்ளார்.

இந்த சம்பவத்தில் குவைட் முதலாளி, அவருடைய சாரதி கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.

தொடர்ச்சி P2

## பாடசாலை மட்ட நிகழ்வுகளில் தலையிடுதலுக்கு கண்டனம்

நிதர்ஷன் வினோத்

பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பொலிஸாரினதும் அரச புலனாய்வாளரினதும் இராணுவத்தினரின் தலையீடுகள் மற்றும் விசாரணை செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் தீபன் தீலீசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “வலியுறுத்தியதாக கூறவில்லை”



நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், நெருக்கடிகளின்போது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு வெளிநாட்டு தூதரகங்கள், தூதுவர்கள் எவரும் என்னிடம் வலியுறுத்த வில்லை. அப்படி வலியுறுத்தியதாக நான் கூறவுமில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (01) எதிரணியின் சுயாதீன எம்.பி.யான கெவிந்து குமாரதுங்க ‘உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்ட கருத்து தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. அவர் நீதின்றத்துக்கு முன்னிலையாகவுள்ளார்.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு அரசியல் குழப்பங்கள்,நெருக்கடிகள் தீவிரமடைந்த போது அரசியலமைப்புக்கு முரணாக அரசாங்கத்தை பொறுப்பேற்க வெளிநாட்டு தூதுவராலயங்கள் உங்களுக்கு அழுத்தம் பிரயோகித்ததாக நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால் அவ்வாறு அழுத்தப் பிரயோகித்த தூதரகங்களினதோ தூதுவர்களினதோ பெயர் குறிப்பிடவில்லை.

தொடர்ச்சி P2




## காஸ் விலைகள் குறைந்தன

லிட்ரோ மற்றும் லாஃப் சமையல் எரிவாயுவின் விலைகள் திங்கட்கிழமை (01) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12.5 கிலோ கிராம் நிறைடைய லிட்ரோ சமையல் எரிவாயு 135 ரூபாவினால் குறைக்கப்பட்டு 4,115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

இதேவேளை, 5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 55 ரூபாவினால் குறைக்கப்பட்டு 1,652 ரூபாவுக்கும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 23 ரூபாவினால் குறைக்கப்பட்டு 772 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2



## “ரூ.700 கோடி வரி அறவிடவில்லை”

இலங்கை மதுவரித் திணைக்களம் 700 கோடி ரூபாய் வரியை அறவிடவில்லை.

அதேவேளை 1,06,600 கோடி ரூபாய் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வசூலிக்கவில்லை என வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவரும் எம்.பியுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பாலியல் உறவு வயது வாபஸ்



பாலியல் உறவு கொள்ளும் வயதை 14 ஆக குறைக்கும் வகையில் தண்டனை சட்டகோவையின் 364ஆம் பிரிவை திருத்துவதற்கான இரண்டாம் மதிப்பீட்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச சட்டமூலத்தை வாபஸ் பெற்று விட்டதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்‌ஷ சபைக்கு அறிவித்தார்.

1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கு அமைய, 16 வயதுக்குட்பட்ட பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில் பாலியல் உறவு கொண்டாலும்,அது பாலியல் வல்லுறவாக ருதப்படும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கல்முனை வடக்கு தமிழர்களின் பிரதேசம்”

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்ற ஒரு பிரதேச செயலகத்தை மூடுவதற்கு , தரம் இறக்குவதற்குச் சிலர் முயற்சித்து வருகின்றனர் இதற்கு எதிராகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக செயற்பாடுகளுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கும் அத்துமீறல்களுக்குமான எதிர்ப்பைத் தெரிவித்துமே களமுனையில் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த மக்களின் கோரிக்கைகளாக “கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் ஒன்றாகத் தரம் குறைப்பதற்கான சட்டவிரோத சூழ்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப அலுவலகம் ஒன்றாகக் கருதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும், கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் தனது அதிகாரங்களை கல்முனை வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் சட்டவிரோதமாகப் பிரயோகித்து வருவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், 1993-07-28 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீனமான தொழிற்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும்,கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக எல்லைகளை வர்த்தமானிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பவை உள்ளன என்றார்.

1993-07-28ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் முடிவு எடுக்கப்பட்டு இந்தப் பிரதேச செயலகம் தனித்துவமாக இயங்கிவருகின்றது. கடந்த முறை எம்.பியாக இருந்த கோடீஸ்வரன் இந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருந்துள்ளார். இப்போதும் கூடபிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவர் திட்டமிட்டு கூட்டங்களை நடத்துவதில்லை. அங்குச் செல்வதில்லை.அந்த மக்கள் தொடர்ந்து போராடுவதற்கான காரணம் இதுதான். ஆகவே, மக்களின் இந்தக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த பிரதேச செயலகத்தை இயங்க விடாது தடுப்பது அந்த மக்களின் மனித உரிமைகளை மீறும் செயல்.

ஆகவே, அந்த மக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.அந்த மக்களுக்கு எமது முழு மையான ஆதரவை நாம் வழங்குவோம் என்றார்.



## வரியை நீக்கினால் கேக் 400 ரூபாவாகும்

இதற்கமைய, தரமான கேக் கிலோ கிராம் ஒன்றின் விலை சுமார் 1,000 ரூபாய் எனவும், 35 ரூபாய்க்கு முட்டை வழங்கினால் ஒரு கிலோ கிராம் கேக்கின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படும்.

ஒரு கிலோ கிராம் வெண்ணெய்யின் மீது விதிக்கப்பட்டுள்ள 900 ரூபாய் வரியை நீக்கினால் ஒரு கிலோ கிராம் கேக்கை 400 ரூபாய்க்கு விற்பனைச் செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## மரண தண்டனை கைதி மரணம்

கண்டி, தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மரணமடைந்தார். புங்குடுதீவை வசிப்பிடமாகக் கொண்ட பாலசிங்கம் தவக்குமார் செந்தில் (வயது 37) என்பவரே மரணமடைந்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், கண்டி வைத்தியசாலையில் மார்ச் 31ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்டார். அதன்பின்னர் அவருக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

முழு உலகத்தையும் உலுக்கிய வித்யா படுகொலை 2015.05.13 புங்குடுதீவில் இடம்பெற்றது. எட்டு வயதான பாடசாலை மாணவி வித்யா, சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி, படுகொலைச் செய்யப்பட்டார். சம்பவத்தில் தொடர்புடைய சுவீஸ் குமார் உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஏழுபேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவை விசாரணையில் உள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

## சூத்திரதாரி யார்?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்த தாக்குதல் தொடர்பான மலல்கொட குழு அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, பாராளுமன்ற விசேட தெரிவுக் குழு அறிக்கை என்பனவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவோ அல்லது அவற்றைப் பரிசீலனை செய்யவோ அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (01) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பான அறிக்கையின் சில பகுதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட மறைக்கப்பட்டுள்ளன. போதிய ஆதாரம் இன்றி, தெரிவு செய்யப்பட்ட பிரதான சூத்திரதாரிகளாகச் செயல்பட்டவர்களின் பெயர்களைக் கூறி பல்வேறு நபர்கள் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

விசாரணையின் விஸ்தீரனம் மற்றும் இது தொடர்பாக விடுக்கப்பட்ட பரிந்துரைகள், இந்த பரிந்துரைகளை அமுல்படுத்தாததற்கான காரணங்கள், இந்த விசாரணை அறிக்கைகள் பொதுமக்களுக்குக் கிடைக்காததற்கான காரணங்கள், தற்போதைய ஜனாதிபதி 18.7.2022 அன்று கூறியது போன்று இது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தெரிவித்த இந்த விசாரணை தொடர்பான தகவல்களை அறிய விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். இன்று இது சில எம்.பிக்களுக்கு நகைச்சுவையாக இருந்தாலும், ஒட்டுமொத்த மக்களுக்கும் இது நகைச்சுவையாக அமையவில்லை. பாதிக்கப்பட்ட மக்களை நகைச்சுவைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்தார்..

அத்துடன், சஹ்ரானுடன் அதிக தடவை தொலைபேசி உரையாடல்களை நடத்திய புலனாய்வுத் துறை அதிகாரி யார் என்பதை எப். பி.என். நிறுவனம் அறிவித்தாலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதில் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களுடன் புலனாய்வுத் துறையினருக்குள்ள தொடர்பு குறித்த விடயங்களை அறிய விரும்புவதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, ஜனாதிபதி வேட்பாளராக முன்வந்து கூடிய பயனடைந்தார். தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டறிவதாக வாக்குறுதியளித்த போதும், அது நிறைவேற்றப்படவில்லை. ஜனாதிபதியான பின்னர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட 31க்கும் மேற்பட்ட அதிகாரிகள் இடமாற்றம் செய்தார். இதற்கான பதில்கள் இன்றே தேவைப்படுகிறது. தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## குவைட் முதலாளியுடன் மனைவி கும்மாளம்

சம்பவத்தில் தீக்காயங்களுக்கு உள்ளான கணவரின் தந்தை மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம், பிபில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு வீதி, வெலிபோதாய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 40 வயதுடைய இந்தப் பெண், குவைத்தில் பணிபுரிந்து வந்த தனது முதலாளியான 80 வயதான நபர் மற்றும் அவரது சாரதி கே.கே.நாமல் ஆகியோருடன் வீடு திரும்பியுள்ளார்.

இதற்கு முன் பலமுறை அவ்விருவருடன் வீட்டுக்கு அப்பெண் வந்துள்ளார். இதுகுறித்து கணவன்-மனைவி இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சனிக்கிழமை (30) கடும் கோபமடைந்த கணவன், மனைவியைத் தாக்கி அவருடன் வந்த குவைத் நாட்டவர் மற்றும் சாரதியைத் தாக்கி வீட்டிற்கு தீ வைத்துள்ளார்.

குவைத் நாட்டைச் சேர்ந்தவர், சாரதி ஆகியோர் காயமடைந்த நிலையில், பிபில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அங்கிருந்த 70 வயது சுகயீமடைந்திருந்த கணவரின் தந்தையான திஸ்ஸ ஹெட்டியாராச்சி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குவைட் நாட்டைச் சேர்ந்தவரை விசாரிப்பதற்கு மொழிபெயர்ப்பாளரின் உதவி பெறப்பட உள்ளது.

## காஸ் விலைகள் குறைந்தன

லாஃப் 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 625 ரூபாவால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 4,111 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 05 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 248 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன் புதிய விலை 1,652 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## “வலியுறுத்தியதாக கூறவில்லை”

ஆகவே, அரசியலமைப்புக்கு முரணாக அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு அழுத்தம் பிரயோகித்த தூதுவராலயங்கள் , தூதுவர்கள் யார் என்பதை அறிவியுங்கள் என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய சபாநாயகர் ‘நீங்கள் தவறான விடயங்களைக் கூறுகின்றீர்கள். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், நெருக்கடிகளின்போது அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு வெளிநாட்டுத் தூதரகங்கள், தூதுவர்கள் எவரும் என்னிடம் வலியுறுத்த வில்லை. அப்படி வலியுறுத்தியதாக நான் கூறவுமில்லை, எனவே, சபையில் பொய்யுரைக்க வேண்டாம் என்றார்.

## பாடசாலை மட்ட நிகழ்வுகளில்...

மேலும் அந்த செய்தி குறிப்பில்,

பாடசாலைகளில் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு நிகழ்வுகளில் அலங்கரிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக, குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும், அரச புலனாய்வாளர்களினதும் அச்சுறுத்தல் இடம்பெற்றுவருவது தனிமனித சிந்தனை மற்றும் மனசாட்சி சுதந்திரங்களை நசுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களாகும்.

இலங்கை அரசின் சட்ட வரையறைக்குட்பட்டு கருத்தியல் ரீதியாகவும், கலை ரீதியாகவும் குறியீட்டு வடிவங்கள் மூலமாகவும் சமூகம் சார் பிரக்ஞைகளை வெளிப்படுத்தும் போது, அதனை அரச இயந்திரங்களால் நசுக்கும் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதற்கு கல்வி திணைக்களங்களும் துணைபோகுமானால், கல்விக்குள் இராணுவ மற்றும் பொலிஸ் தலையீடுகளை ஆதரிக்கும் செயற்பாடுகளாகவே இவை அமையும்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டியின், இல்ல அலங்காரங்களில் மாணவர்கள் வெளிப்படுத்திய வெளிப்பாடுகள், இலங்கை அரசியலமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான சிந்தனை மற்றும் மனசாட்சி சுதந்திரத்துக்கு உட்பட்டதாகும்.

இந்த விடயங்களில் பொலிஸாரோடு இணைந்து வடமாகாண கல்வி அமைச்சும் தலையீடு செய்வதென்பது மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

இவ்விடயம் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யவுள்ளோம். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

## “ரூ.700 கோடி...

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (01) வழிவகைகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இதைத்தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், இலங்கையின் தேசிய வருமானத்தில் இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால், இந்நிறுவனங்கள் முறையாக வரி அறவிடுவதில்லை. இதனால் தொடர்ச்சியாக அரச வருமானம் இழக்கப்பட்டுள்ளது

தேசிய இறைவரித் திணைக்களம் 2023.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 1,06,600 கோடி ரூபாய் வரியை அறவிடவில்லை.

அத்துடன் 1 முதல் 5 ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் 65,600 கோடி ரூபாய் இழக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஞானசாருக்கு கடூழிய...

அவ்வாறான நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (01) இடம்பெற்ற ஆயுர்வேத சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் பேசுகையில்,

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஆதரவாக நான் இங்குப் பேசவில்லை. ஆனால் உண்மையை யதார்த்தத்தைப் பற்றி நான் பேசியேயாகவேண்டும்.

கூரகல விகாரை விவகாரத்தைத் தொடர்புப்படுத்தி ஞானசார தேரர் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான்,முன்னாள் ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் வழக்குத் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்குக்கு அமையவே ஞானசார தேரருக்கு நீதிமன்றத்தினால் 4 வருட கால கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கூரகல விகாரை 2000 ஆண்டுகால பழமை வாய்ந்தது. இந்த விகாரையை அண்மித்த பகுதியில் இருந்த பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை முஸ்லிம் அடிப்படைவாதிகள் அசிட் திரவம் ஊற்றி அழித்து,அடையாளங்களைச் சிதைத்து கட்டிடங்களை அமைத்துள்ளார்கள். இதற்கு எதிராகவே ஞானசார தேரர் குரல் கொடுத்தார்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் போது பௌத்தர்களின் மனம் வேதனையடையாதா? கூரகல விகாரையின் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்பட்டுள்ளதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரரே ஆரம்பத்தில் எச்சரித்தார். .ஆனால் அதனை எவரும் கவனத்தில் எடுக்க வில்லை. விளைவு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடந்தது. இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி ஞானசார தேரர் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையாகியுள்ளன

நீதிமன்றத்தினால் ஞானசார தேரருக்கு 4 வருடக் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை பௌத்தர்களுக்கு மன வேதனையளித்தால் அது இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும். இது நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்கும் எனவே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்றார்.

## பாலியல் உறவு வயது...

எனினும்,நீதி அமைச்சரால் தண்டனைச் சட்டக் கோவைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் மூலம் அந்த வயது எல்லையை 14 வயது வரை குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

நீதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்துக்கு அரசியல் மற்றும் சிவில் தரப்பு மத்தியில் கடும் விமர்சனமும் எதிர்ப்புகளும் எழுந்தன. இந்த சட்டமூலத்தை மீளப்பெறுமாறு பல்வேறு தரப்பினர் தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

இந்நிலையிலேயே பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை பாலியல் தொடர்பு கொள்ளும் வயதை 14 ஆக குறைக்கும் வகையில் தண்டனை சட்ட கோவையின் 364ஆம் பிரிவைத் திருத்துவதற்கான இரண்டாம் மதிப்பீட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச சட்டமூலத்தை வாபஸ் பெற்று விட்டதாக அவர் அறிவித்தார்.

சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும்

# "அர்ப்பணிப்பு வேண்டும்"

எம்.எஸ்.எம்.ஹனீபா

நாட்டின் நிலையான அபிவிருத்திக்கும் சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும் நாம் எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையத்தோடு இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மாற்று வழி பிணக்கு தீர்வு தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும்,சர்வமத கண்காட்சியும் ஒலுவில் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

"ஒரு மதத்தினுடைய கலாசாரத்தை ஏனைய மதம் புரிந்து செயற்படுமாயின் கடந்த காலங்களில் ஏற்பட்ட இனப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

எதிர்காலத்தில் பிரச்சினைகளை பேசித் தீர்க்க கூடிய ஒரு நிலையான திட்ட வரைபினை சர்வமத குழுவினர் ஊற்படுத்த வேண்டும். அதனூடாகத்தான் நிரந்தரமான சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்.

சகல சமூகங்களும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையுமே விரும்புகின்றது. ஒவ்வொரு சமூகத்தவர்களும் பரஸ்பர புரிந்துனர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்த்திருக்கின்ற நிலையான சமாதானத்தை அடைய முடியும். தேசம் முழுதும் சமூகங்களின் மத உரிமையையும், நல்வாழ்வையும் பாதுகாப்பதற்கான உள்ளூர் பொறிமுறைபற்றிய உள்ளூர் வளங்களைக் கொண்டு புதிய அறிவு உற்பத்தி செய்யப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கும், இன உறவை வளர்ப்பதற்காகவும் அரசாங்கத்தினால் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இதற்கென அமைச்சும் ஏற்படுத்தப்பட்டு கூடுதலான நிதியினையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

மத ஒற்றுமையையும் சமய சகவழ்வையும் நம் தேசத்தில் கட்டியெழுப்புவதற்கு மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழும் முன்மாதிரிப் பூமியாகிய அம்பாறை மாவட்ட மக்கள் பங்காளியாக அமைவார்கள் என நம்புகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

# பணிப்பாளர் சபை தெரிவு

வ.சக்திவேல்



மட்டக்களப்பு - மண்முனை தென் எருவில் பற்று பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவும், பேராளர் மாநாடும் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள சங்கத்தின் கட்டிடத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்றுள்ளது.

இதன்போது, சங்கத்திற்குரிய பணிப்பாளர் சபை உறுப்பினருக்கான தெரிவு, தேர்தல் மூலம் இடம்பெற்றதுடன், பணிப்பாளர் சபையின் தலைவராக மே.வினோராஜ், உபதலைவராக ம.சதானேசன், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக மா.திருநாவுக்கரசு ப.குணசேகரன் அ.றுத்றா ச.தனுசியா சு.துருபதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கசிப்பு நிலையம் முற்றுகை; இருவர் கைது

றொசேரியன் லெம்பட்

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஈச்சளவக்கை கிராமத்தின் காட்டுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(31) சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிடப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈச்சளவக்கை கிராமத்தின் காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற நிலையில், ஈச்சளவக்கை கிராமத்தின் மருதம் விளையாட்டு கழகத்தின் ஆறு பேர் மற்றும் ஊடகவியலாளர்




ஒருவரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கசிப்பு பரல்கள் மற்றும் குழுவினரால் மீட்கப்பட்ட சட்டவிரோத மதுபானங்கள் அடம்பன் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கைதான இருவர், தாம் மேலும் சட்டவிரோத மது உற்பத்தியை முன்னெடுக்க உள்ளதாகவும், பிடித்துக் கொடுத்தவர்களுக்குத் தாக்குவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். உடனே குறித்த இருவர் அடம்பன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற மையினால் இளைஞர்கள், சிறுவர்கள், பாடசாலை செல்லாது கசிப்பு மாபியாக்களுக்கு அடிமையாக உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலை தாக்கியதில் பெண் மரணம்

குருணாகல் - மெகலேவ, கலங்குட்டிவ ஆற்றில் நீராடச் சென்ற பெண் ஒருவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார்.

லிகொலவெவ- சியம்பலங்காமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மெகலேவ பொலிஸார் தெரிவித்தள்ளனர்.

முதலையிடமிருந்து பெண்ணை மீட்ட பிரதேசவாசிகள், அவரை தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இருந்த போதும், அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூலித்தொழிலாளி சடலமாக மீட்பு




எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு- மாவடிஓடை ஆற்றில் மூழ்கிய கூலித்தொழிலாளியான ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஸ்தபா முகமுது (வயது 57) சடலமாக ஞாயிற்றுக்கிழமை (31) மாலை மீட்கப்பட்டுள்ளார்.

பசு மாட்டுப் பண்ணை ஒன்றில் சுமார் 15 வருட காலமாகக் கூலித்தொழிலாளியாகக் கடமையாற்றிய குறித்த நபர், அங்குள்ள ஆற்றில் குளிப்பது வழக்கமாகக் கொண்டுள்ளார். அதன்படி, சம்பவ தினத்தன்று ஆற்றில் குளிக்கச்சென்றபோது, நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# மாணவியை துஷ்பிரயோகம் செய்தவர் காதல் வலையில் சிக்கினார்

14 வயதான பாடசாலை மாணவி ஒருவருடன் பேஸ்புக்கில் தொடர்பை ஏற்படுத்தி, அம்மாணவியை துஷ்பிரயோகம் செய்த 29 வயதுடையவரை, தன்னுடைய போலி காதல் வலையில் சிக்கவைத்து பெண் பொலிஸார், கைது செய்துள்ள சம்பவம் திங்கட்கிழமை(01) இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியுடன் பேஸ்புக் ஊடாக நட்பை ஏற்படுத்தி கொழும்பில் உள்ள தங்குமிட விடுதிக்கு அவரை அழைத்துச் சென்று சில நாட்களாகத் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக மாணவியின் பெற்றோர், பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.



விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபரின் தொலைபேசி இலக்கத்தைக் கண்டுபிடித்து, அந்த எண்ணுக்குப் பெண் பொலிஸ் அதிகாரி கொண்டு அழைப்பை தொடர்பை ஏற்படுத்தி, காதல் ஆசை தூண்டுவது போல் நடித்து, சந்தேக நபருடன் உறவை வளர்த்துள்ளார். இரண்டு வாரங்களாக இவ்வாறு பேசியுள்ளதுடன், தனக்கு வேலையொன்றைத் தேடித் தருமாறு பெண் பொலிஸார் கேட்டுள்ளார்.

வெலிமடை உள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு வருவதாகவும், அப்போது பண்டாரவளையில் சந்தித்து, கொழும்புக்குச் செல்வோம் எனவும் சந்தேகநபர் பதிலளித்துள்ளார்.

எனினும், அந்த இடத்தை மாற்றி பலாங்கொடை பேருந்து நிலையத்துக்கு வருமாறு பெண் பொலிஸ் அதிகாரியிடம் கூறியுள்ளார். அதற்கமைய இரண்டு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, சந்தேகநபரை பலாங்கொடையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த பேருந்தில் வைத்து கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

# மண்மேடு விழுந்ததில் ஒருவர் பலி

பூஜாபிட்டிய- கஹவத்த பிரதேசத்தில் திங்கட்கிழமை (01) இருவர் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில், பூஜாபிட்டிய- திவானவத்த பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான ஜகத் விஜேசூரிய என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீடொன்றின் அத்திபாரத்துக்கான மதிலைக் கட்டிக்கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரையும் உடனடியாக மீட்ட பிரதேசவாசிகள், அவர்களை




அக்குறணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆபத்தான நிலையில் இருந்த மற்றைய நபர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# பிலிப் குணவர்தனவின் 52ஆவது நினைவுதினம்

இலங்கையில் சோசலிச இயக்கத்தை உருவாக்க முன்னோடியாக பணியாற்றிய, மறைந்த பிலிப் குணவர்தனவின் 52ஆவது நினைவுதின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (31) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பு மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ மகா சங்கசபை மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய இத்தேபான தம்மாலங்கார தலைமையில் நினைவு தின வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கல்விமான்கள், ளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச அதிகாரிகள், விசேட அதிதிகள் மற்றும் பிலிப் குணவர்தன குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# விரைவில் பணிகளை முன்னெடுக்க ஆலோசனை

அ.அச்சுதன்

கிண்ணியா உப்பாறு தொடக்கம் கங்கை வரையிலான கரையோரப் பகுதியில் கரையோர நடைபாதை (Beach Walking Path - Kinniya) அமைப்பதற்கும் அதனுடன் இணைந்து அப்பிரதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் ஆராய்வதற்குக் கிழக்கு ஆளுநர் மற்றும் திருகோணமலை மாவட்ட



பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் உள்ளிட்ட குழுவினர் அப்பிரதேசங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (31) விஜயம் செய்துள்ளனர்.

இதன்போது இத்திட்டம் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸ், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் விமல்ராஜ், காணி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

# சிதறு தேங்காய் உடைத்தவர் மரணம்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் உள்ள ஆலயமொன்றுக்குத் சிதறு தேங்காய் உடைத்துவிட்டு வந்த சுன்னாகம் பகுதியைச் சின்னத்தம்பி அர்ஜீனன் (வயது 68) உயிரிழந்துள்ளார்.

சிதறுதேங்காயை உடைத்துவிட்டு, திரும்பிகொண்டிருந்த போது, களைப்பாற வரம்பொன்றில் அமர்ந்திருந்த போதே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.




# 75 அடி பள்ளத்தில் ஜீப்: 10 பேர் படுகாயம்

15 பேரை ஏற்றிச் சென்ற பொலேரோ ரக ஜீப் ஒன்று பண்டாரவளையில் இருந்து ரம்புக்கனை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போது, கம்பளை - நெட்டாபிட்டிய பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி சுமார் 75 அடிக்குக் கீழே கவிழ்ந்ததில் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு இரவு வந்த இந்தக் குழுவினர் திங்கட்கிழமை (01) அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்திற்கு இடம்பெற்றுள்ளது.

மூன்று நாட்களாக இறுதி ஊர்வலத்தில் இருந்த இந்தக் குழுவினர், வேலைக்குச் செல்லும் நோக்கில்



கிராமங்களுக்குச் திரும்பியுள்ளதாகவும் ஜீப் சாரதி தூங்கியதால் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறிய குழந்தைகள் உட்பட ஆறு பெண்களும் ஒன்பது ஆண்களும் இதில் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குறைந்த போது மாறாதது, கூடிய போதும் மாறவில்லை

இலங்கையில் விலைச் சூத்திரத்திற்கமைவாக எரிபொருள்களின் விலைகள் மாதாந்தம் நிர்ணயிக்கப்படுகின்றன. பெப்ரவரி மாதத்தில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்தன.

இந்நிலையில், மார்ச் மாதத்திற்கான எரிபொருள் விலைகள் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டபோது, பொது மக்கள் பெரிதும் பயன்படுத்தும் 92 வகை பெற்றோல் விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.

அது போன்று தற்போது ரஷ்யா, உக்ரேன் மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரிப்பைப் பதிவு செய்திருந்த நிலையில், ஏப்ரல் மாதத்துக்கான எரிபொருள் விலைத் திருத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் போதும் 92 வகை பெற்றோல் விலையில் ஏற்படுத்தப்படவில்லை.

பொதுவில் நாட்டில் சகல பொருட்களின் விலைகளும் எரிபொருள் விலைகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. போக்குவரத்து செலவு முதல், மரக்கறி, உணவுப் பண்டங்களின் விலைகள் என அனைத்துமே எரிபொருள் விலையில் தங்கியுள்ளன.

இந்நிலையில், இம்மாதம் பண்டிகை மாதம் என்பதால் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைவடையும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் 92 வகை பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.

குறிப்பாக இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ள நிலையில், அதன் பலன் பொது மக்களைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அமைச்சரும் கடந்த வாரங்களில் எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் ஏப்ரல் மாதத்துக்கான எரிபொருள் விலைத் திருத்தம் தொடர்பில் எரிபொருள் மற்றும் மின்சக்தி அமைச்சர் வழமை போன்று டுவிட்டர் (ஓ) அறிக்கை எதனையும் இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்படும் வரையில் வெளியிடவில்லை.

மக்கள் மத்தியில் தெளிவற்ற வகையில் இது போன்ற சூத்திரங்களைத் தயாரித்து, எதன் அடிப்படையில் இந்த விலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது தொடர்பில் தெளிவற்ற தன்மையை இந்த அமைச்சரும், அரசங்கமும் ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் என்பது பொது மக்களின் அத்தியாவசிய அடிப்படைத் தேவையாகும், அவற்றைத் தடையின்றி விநியோகிப்பது அமைச்சினதும், அரசாங்கத்தினதும் கடமையாகும்.

அதனைச் செய்யத் தவறுவது அரசாங்கத்தின் செயற்திறன் இன்மையைக் காண்பிக்கின்றதே தவிர, பொது மக்களின் தவறு அல்ல. பொது மக்கள் மேற்கொண்ட தவறு, இவ்வாறான அரசியல்வாதிகளைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பியமை மட்டுமே. அதன் பலனைத் தொடர்ந்தும் அனுபவிக்கின்றனர்.

மார்ச் மாதம் முதல் மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது நாட்டில் நிலவும் கடும் வறட்சியான வானிலையுடன், விரைவில் மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரும் செய்திகளும் வெளிவரும். ஆக நாட்டின் பெருமளவானோர் கொண்டாடும் ஏப்ரல் பண்டிகை மாதம் ஏமாற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தேர்தலுக்கு முன்னர் மைத்திரி போட்ட குண்டு

மொஹமட் பாதுஷா

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காமல் ஐந்து வருடங்கள் கழிந்திருக்கின்றன. நாட்டில் நீதி நிலைநாட்டப்படாத, தீர்வு காணப்படாத, பிராயச்சித்தம் தேடப்படாத சம்பவம் இது மட்டுமே அல்ல. அந்தப் பட்டியலில் இதுவும் ஒன்றாகும்.

இனப் பிரச்சினை தீர்வு, யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி, முஸ்லிம்கள் மீது தமிழ் ஆயுதக் குழுக்கள் நிகழ்த்திய படுகொலைகள் மற்றும் உரிமை மீறல்கள், ஜூலைக் கலவரத்திற்கான நீதி, அதன் பின்னர் இடம்பெற்ற இனக் கலவரங்கள், நாட்டை கொள்ளையடித்தவர்களிற்கான தண்டனை, ஊழல் செய்தவர்களுக்கான தண்டனை என எத்தனையோ விவகாரங்கள் இன்னும் கிடப்பில் கிடக்கின்றன.

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில், ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்போம், நீதியை நிலைநாட்டுவோம்’ என்று கூறி மக்கள் ஆணையைப் பெற்றவர்கள் அப்படி எந்த அபூர்வத்தையும் நிகழ்த்திக் காட்டவில்லை என்பதே நமது அனுபவமாகும்.

ஆட்சியாளர்களின் மனப்பாங்கும் ஆட்சி முறைமையும் மாறாதிருக்கின்ற சூழ்நிலையில். ஒரு தேர்தல் நடந்தால், ஆட்சி மாறினால், சட்டமூலங்களைக் கொண்டுவந்தால், அமைச்சர்களை மாற்றினால், அதிகாரிகளை மாற்றினால், அரசியலமைப்பைத் திருத்தினால்; பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதான பழைய கதையையே இன்று வரை கூறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அப்படி எந்த தீர்வையும் வழங்கியதாகத் தெரியவில்லை. பிச்சைக்காரனின் புண்களைப் போலப் பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. அல்லது எல்லா பரப்புகளுக்கும் பரவியுள்ளன.

இந்த நாட்டில் ஆயுத மோதலுக்கு அடுத்தபடியாக, சில மணிநேரங்களுக்குள்ளேயே பெரும் பிரளயத்தையும் அழிவையும் ஏற்படுத்திய ஏப்ரல் 21 தாக்குதல் பற்றி அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

இவ்வளவு காலமும் தனக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது என்ற தோரணையில் செயற்பட்ட மைத்திரி, தேர்தல் ஒன்று நெருங்கி வரும் நேரத்தில் திடுதிடுப்பென ‘எனக்குத் தெரியும்’ என்று கூறியிருக்கின்றார்;. பிறகு, இந்த தகவல் தனக்கு அண்மையிலேயே தெரிய வந்ததாகவும் சொல்லியுள்ளார்.

இதனையடுத்து, அவர் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவர் என்ன கூறினார் என்பது உத்தியோகப்பூர்வமாக வெளிப்படுத்தப்படா விட்டாலும் இத்தாக்குதலில் இந்தியாவின் பின்னணி குறித்து சில தகவல்களை அவர் கூறியிருப்பதாகச் செய்திகள் கசிந்திருக்கின்றமை கவனிப்பிற்குரியது.

முன்னதாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றவுடன் முஸ்லிம்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார்கள். சட்டமும் அவர்கள் மீது பாய்ந்தது. சஹ்ரான் கும்பல் இந்த பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்டார்கள் என்ற காரணத்திற்காகச் சகோதர இனங்களும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் சந்தேகக் கண்கொண்டே பார்த்தன.

முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் இலங்கையில் முன் பகை எதுவும் இல்லை. இந்நிலையில் சிங்கள இனவாதத்தின் வன்கொடுமைகளைக் கூட பொறுத்துக் கொண்டு வாழ்கின்ற முஸ்லிம் மக்கள், எந்தக் காரணமும் இன்றி இப்படியொரு நாசக்கார செயலைச் செய்யமாட்டார்கள் என்பது வெளிப்படையான விடயம்.

ஆனால், முஸ்லிம் சமூகம் இதனைச் சொன்ன போது பெரிதாக யாரும் காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. இதற்குப் பின்னால், அரசியல் சதியோ, வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலோ இருக்கின்றது என்ற அனுமானங்களைப் பொறுப்பில் இருந்தவர்கள் கணக்கெடுக்கவில்லை.

உண்மையில், இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கையில் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான, அற்பத்தனமான, மனிதகுல விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட இந்த பயங்கரவாத தாக்குதலால் உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்த கத்தோலிக்க மக்களின் இழப்புக்கள் சொல்லி மாளாது.

அதற்கு அடுத்தபடியாக நெருக்குவாரங்களையும் மன அழுத்தங்களையும் அதிக அளவில் சந்தித்தவர்கள் முஸ்லிம்கள் என்பதையும் மறுக்க முடியாது. ஆனால், இந்த நொடி வரையும் நீதி நிலைநாட்டப்பட்டு குற்றவாளிகள், சூத்திரதாரிகள் தண்டிக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி புதுப்புது கதைகளும் ஆதாரங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றனவே தவிர அறுதியும் இறுதியுமான ஒரு தீர்வு காணப்படவில்லை. சரியான விசாரணைகள் இடம்பெற்று சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படாமையின் காரணமாகவே புதுப்புது பூதங்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன என்றும் கூறலாம்;.

2019 ஏப்ரல் தாக்குதலைத் தொடர்ந்து, கோட்டபாய ராஜபக்ஷ தனது அமெரிக்க பிரஜாவுரிமையை துறந்தார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ராஜபக்ஷ குடும்பம் ஆட்சிக்கு வந்தாலேயே இந்த பயங்கரவாதத்தையும் ஒழிக்க முடியும் என்ற பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. அது வெற்றியையும் தந்தது.

இதுவே பல சந்தேகங்களை எழுப்பியிருந்தது. ஆனால், விசாரணைகள் அந்தக் கோணத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி, இத்தாக்குதலில் அரசியல் தரப்பின் அல்லது வெளிநாடுகளின் பின்னணி இருக்குமா என்ற சந்தேகங்கள் சாதாரண மக்களுக்கே ஏற்பட்டன. அந்தக் கோணத்திலும் விசாரணைகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

இந்த தாக்குதல் நடைபெற்றபோது, இதே மைத்திரிபால சிறிசேனதான் ஜனாதிபதியாக இருந்தார். ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவி வகித்தார். ஆனால், தமக்கு எதுவும் தெரியாது என்று மைத்திரி கையை விரித்தார், அதிகாரிகள் பொறுப்புக் கூறலுடன் செயற்படவில்லை. விசாரணைகள் இடம்பெற்றன ஆனால் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இவ்வாறான போக்கை அவதானித்த கத்தோலிக்க சமூகம் மட்டுமன்றி நாட்டில் வாழும் சிங்கள, தமிழ் மக்களும் இது ஒரு அரசியல் பின்னணியுடனான சதித்திட்டம் என்பதையும் அதற்கு முஸ்லிம் கும்பல் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதையும் உணர்ந்து கொள்ள அவ்வளவு காலம் எடுக்கவில்லை. இருப்பினும் சட்டத்தின் கண்ணுக்கு இதுவெல்லாம் தெரியவில்லை.

இந்நிலையில், பிள்ளையானின் நெருங்கிய சகாவாக இருந்த அஸாத் மௌலானா சில மாதங்களுக்கு முன்னர் சில தகவல்களை செனல்-4 தொலைக்காட்சிக்கு கூறியிருந்தார். ‘இந்த தாக்குதல் ஆட்சி மாற்றத்திற்காக நடத்தப்பட்டது’ என்பதும் ‘தாக்குதல் நடத்தியவர்களையும் ராஜபக்ஷ தரப்பையும் இணைக்கும் பணியை தாங்கள் (பிள்ளையான் தரப்பு) மேற்கொண்டதாகவும்’ சொல்லியிருந்தார்.

அஸாத் மௌலானா ஒரு தேசப் பற்றாளரும் இல்லை. இன நல்லிணக்கவாதியும் இல்லை. அவரும் கூட்டுக் களவாணிதான். ஆனால், அவர் கூறிய விடயங்கள் புறக்கணிக்க முடியாதவை. இவரது காணொளி சமூகத்தில் பெரும் கொதிப்பை ஏற்படுத்திய போதிலும், மக்கள் எதிர்பார்த்தபடி விசாரணைகள் இடம்பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணையொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த தனக்குப் பொருளாதார வசதி இல்லை என்று கூறி, இழுத்தடித்து வரும் மைத்திரி இப்போது, தனக்குச் சூத்திரதாரிகளைத் தெரியும் என்று ஒரு புதுக் குண்டை தூக்கிப் போட்டுள்ளார். அதாவது,


இப்படி காலத்திற்குக் காலம் புதுப்புது கதைகள் வருவதற்கும், ஆளுக்கொரு விதமாக இவ்விடயத்தைக் கையாள்வதற்கும் அடிப்படைக் காரணம், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் முறையான, முழுமையான, வெளிப்படையான, பாரபட்சமற்ற விசாரணையொன்று இடம்பெறாமையாகும்.

தேர்தலொன்று நெருங்கி வரும் நிலையில் கோட்டபாய புத்தகம் எழுதியுள்ளார். பிள்ளையானும் புத்தகம் வெளியிட்டுள்ளார். இனவாதிகளுக்கு சட்டப்படி அச்சமூட்டப்படுகின்றது. இந்தப் பின்னணியில், திடுதிடுப்பென மைத்திரி இவ்வாறு கூறுவதும் அரசியலுக்காக இருக்கலாம்.

இந்த நாட்டில் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக இனவாதமும் பிரித்தாளும் உத்தியும் கையாளப்பட்டிருக்கின்றது என்றால், ஆட்சி மாற்றத்திற்காகவே உயிரைக் கொல்லும் சதித்திட்டம் தீட்டப்பட்டது என்பது உண்மையென்றால், அதே கருவிகள் மீண்டும் வேலை செய்கின்றனவா என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினர் மீண்டும் உரசிப் பார்ப்பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன.

ஆகவே, தேர்தலை மையமாகக் கொண்டு அல்லாமல், நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் இவ்விவகாரத்திற்கு முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும்.

அவ்வாறில்லாமல், அரசியலுக்காக, தேர்தலுக்காக அல்லது மக்களை ஏமாற்றி காலத்தை இழுத்தடிப்பதற்காக இவ்விவகாரம் இதுபோன்ற ஏனைய நாட்பட்ட பிரச்சினைகளும் இனியும் பயன்படுத்தப்படுமென்றால், 2030 தேர்தலிலும் இதே ஆயுதம் மீண்டும் கையிலெடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

சில சந்தர்ப்பங்களில் ஆணவம், மிடுக்கு, செருக்குத் தேவைப்படுகிறது. ஆனால், இது நல்ல குணங்கள் அல்ல. எங்களை நாங்கள் உறுதியாக வைத்திருக்கவும் இந்த நிலை தேவைப்படுகின்றது.

இந்த வேடங்கள் அவசியமான கட்டங்களில் உருவாகியும் விடுகின்றது.

உண்மையில் நீங்கள் திறமைசாலியாகவும் இறக்கம் உள்ளவர்களாக நல்ல நிலையில் இருந்தும் உங்களைக் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தால் சிலர். அதனைச் சாதகமாக்கிக் கொள்ள எத்தனிப்பார்கள்.

அவர்கள் எடுத்தெறிந்தும் பேசுவார்கள், தேவையின்றி, கிண்டல், கேலி அவமானப்படுத்தல் போன்ற காரியங்களையும் செய்ய முயல்வார்கள்.

நீங்கள் மிடுக்காக உங்களைக் காட்டிக்கொள்ளாவிட்டால் எத்தனையோ பேர்வழிகள் தொடர்ந்தும் அருவருப்பாகவே இருப்பார்கள்.

எனவே, ஆணவம், மிடுக்கு போன்ற ஆயுதங்களைக் கையாளவேண்டி வரும். சிலரை எல்லைமீறி நடக்க இடமளிக்கலாகாது.

– பருத்தியூர் பால– வயிரவநாதன்

## கடிதங்கள்

### நம்பிக்கை இல்லை



மாலைகள் அணிந்து சேதமடைந்த வீதியினை பார்வையிட வரும் அரசியல் அதிகாரிகளினால் எந்தவித பயன்களும் ஏற்படப் போவதில்லை என முல்லைத்தீவின் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களின் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரட்டைவாய்க்கால் தொடக்கம் சாலை வரையான 11 கிலோ மீற்றர் வீதியினை புனரமைப்பதற்கு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகங்களில் கோரிக்கைகள் விடுத்திருப்போம். ஆனால் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மாலைகள் அணிந்தபடி எமது வீதியினை பார்வையிடுவார்கள்.

ஆனால், புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

மேற்படி வீதியினை பயன்படுத்தி வலைஞர்மடம் பாடசாலை, அம்பலவன்பொக்கணை பாடசாலை, மாத்தளன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் உள்ளன. இப்பகுதியில் 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றதால் அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்







# வசந்த கால கொண்டாட்டம் ஆரம்பம்

நுவரெலியாவில் ஏப்ரல் மாதத்தில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் வசந்த கால நிகழ்வுகள் 2024ஆம் ஆண்டுக்கான விழா, நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக மிகவும் கோலாகலமாகத் திங்கட்கிழமை (01) ஆரம்பித்துவைக்கப்பட்டன.

வழக்கம் போல் நுவரெலியா நகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடன் இந்த வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பமாகின. இம்மாதம் 30ஆம் திகதி வரை வசந்தகால கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

நுவரெலியா மாநகர சபை ஏற்பாட்டில் நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் சுஜீவ போதிமான தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இம்மாதம் முழுவதும் பல்வேறு பாரம்பரிய நிகழ்வுகள் போட்டிகள் என்பன ஏற்பாடாகியுள்ளன.

மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# 'அனிமல்' 2இல் ராஷ்மிகா இல்லை?





கடந்த ஆண்டு இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் வெளியாகி, கடுமையான எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் மீறி மிகப்பெரிய வெற்றிபெற்று, வசூலில் சாதனை படைத்திருந்த படம், 'அனிமல்'.

சந்தீப் ரெட்டி வங்கா இயக்கியிருந்த இந்தத் திரைப்படத்தில் ரன்பீர் கபூர், ராஷ்மிகா மந்தனா, அனில் கபூர், பாபி தியோல், திரிப்தி டிம்ரி நடித்திருந்தனர்.

முன்னதாக, தெலுங்கில் விஜய் தேவரகொண்டா, ஷாலினி பாண்டே நடித்திருந்த 'அர்ஜூன் ரெட்டி' படத்தை சந்தீப் ரெட்டி வங்கா இயக்கியிருந்த நிலையில், பல்வேறு மொழிகளில் ரீமேக் செய்யப்பட்ட இப்படமும் கடுமையான எதிர்ப்பு மற்றும் விமர்சனங்களைச் சந்தித்தது

இருந்தாலும், பெரிய வெற்றிபெற்று வசூலிலும் சாதனை படைத்தது. இதை ஹிந்தியில் ஷாஹித் கபூர் நடிப்பில் சந்தீப் ரெட்டி வங்கா, ரீமேக் செய்து இயக்கினார். இந்நிலையில், 'அனிமல்' படத்தின் 2ஆம் பாகம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

ரன்பீர் கபூர் பேசுகையில், 'நான் ராமாயணம், லவ் அன்ட் வார் ஆகிய படங்களில் நடிக்கிறேன். இப்படங்களை முடித்துவிட்டு, வரும் 2026இல் 'அனிமல்' 2ஆம் பாகம் படத்தின் படப்பிடிப்பில் கலந்துகொள்வேன்' என்றார்.

இதேவேளை, 2ஆவது பாகத்தில் ராஷ்மிகா மந்தனா நடிக்கின்றாரா என்பது குறித்து எதுவும் கூறவில்லை.

# ரஜினியின் 'கழுகு'



ஜெயிலர் திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த்தின் 171ஆவது படத்திலும் சன் பிக்சர்ஸ் மீண்டும் இணைகிறது. இந்தப் படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க, அனிருத் இசையமைக்கிறார்.

இயக்குநர் லோகேஷ் நடிகர் விஜய்யை வைத்து இயக்கிய லியோ திரைப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றாலும் வசூல் ரீதியான வெற்றிப்படமானது.

தற்போது, லோகேஷ் கனகராஜ் 'தலைவர் 171' படத்திற்கான திரைக்கதை வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். ஏப்ரல் 22ஆம் திகதி பெயர் டீசர் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரஜினி – 171 படத்துக்கு 'கழுகு' எனப் பெயரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதேநேரம், பான் இந்திய திரைப்படமாக இது உருவாகும் என்பதால், படத்தின் பெயரை ஆங்கிலத்தில் வைக்கவும் வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக, 1981இல் இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் நடிகர் ரஜினி நடித்த கழுகு திரைப்படம் வெற்றியைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜய்யின் கடைசி இயக்குநர்?






இயக்குநர் வெங்கட் பிரபு இயக்கத்தில் 'கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்' என்கிற திரைப்படத்தில் தளபதி விஜய் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், அவர் அரசியலுக்கு வருவதாக அறிவித்தார். அவருடைய திடீர் அறிவிப்பால் தமிழக அரசியலில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

இதனையடுத்து, அரசியல் அறிவிப்புடன் இனி சினிமாவில் நடிக்கப்போவதில்லை என்பதையும் விஜய் அறிவித்திருந்தார். இறுதியாக, விஜய் - 69 படத்துடன் அவர் சினிமாவிலிருந்து விலகுவார் என கூறப்படுகின்றது.

விஜய்யின் கடைசி படமென்பதால், இதை யார் இயக்குவார் என்கிற கேள்விக்கு தற்போது விடையாகத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

அந்தத் தகவலின்படி, விஜய்யின் கடைசி படத்தை இயக்குநர் ஹெச். வினோத் இயக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. வினோத் நடிகர் அஜித்தை வைத்து நேர்கொண்ட பார்வை, வலிமை, துணிவு படங்களை இயக்கி இருந்தார்.

இதேவேளை, நடிகர் கமல்ஹாசன் - வினோத் கூட்டணியில் புதிய படம் உருவாகும் என அறிவிக்கப்பட்ட போதும், சில காரணங்களால் அப்படம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஜோதிகா படத்தில் திடீர் மாற்றம்

பிரபல நடிகை ஜோதிகா தென்னிந்திய மொழிப் படங்களைத் தொடர்ந்து ஹிந்தியிலும் நடித்து வருகிறார். கடந்த 1998ல் 'டோலி சஜா கே ரக்னா'என்ற ஹிந்தித் திரைப்படத்தில் நடித்திருந்த அவர், 26 ஆண்டுகளுக்குப் பிறகு 'சைத்தான்' என்ற படத்தில் நடித்திருந்தார்.

விகாஸ் பால் இயக்கத்தில் அஜய் தேவ்கன், மாதவன், ஜோதிகா நடிப்பில் திரைக்கு வந்த இப்படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்து வருகின்றது. இதையடுத்து பார்வையற்ற மாற்றுத்திறனாளி தொழிலதிபரான ஸ்ரீகாந்த் பொல்லா என்பவரின் வாழ்க்கை வரலாறு படத்தில் ஜோதிகா நடிக்கிறார்.

தொழிலதிபர் கேரக்டரில் ராஜ்குமார் ராவ் நடிக்கிறார். முதலில் 'ஸ்ரீ' என்று பெயரிடப்பட்ட இந்தத் திரைப்படத்துக்கு திடீரென்று 'ஸ்ரீகாந்த்' என்று பெயர் மாற்றப்பட்டதாகப் படக் குழுவினர் தெரிவித்தனர். துஷார் இயக்கியுள்ள இந்தத் திரைப்படம் வரும் மே மாதம் 10ம் திகதி பல்வேறு மொழிகளில் திரைக்கு வரவுள்ளது.



## கொழும்பு, விவேகானந்தா கல்லூரி

# ஏப்ரல் 7 இறுதி போட்டி

கொழும்பு, விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் பழைய மாணவிகளுக்கு இடையில் நடத்தும் வலைப்பந்தாட்ட போட்டிகள் கல்லூரியின் மைதானத்தில், ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்றன. இதேவேளை, மகளிர் தினத்தையொட்டி, ஏப்ரல் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 வரை கலை நிகழ்வுகள் பல நடைபெறவுள்ளன. அன்றைய தினமே, வலைப்பந்தாட்ட இறுதி போட்டியும் மூன்றாம் இடத்துக்கான போட்டியும் நடைபெறும்.

















## கச்சத்தீவு விவகாரம் சூடுபிடிப்பு

# “இரண்டுமே காரணமாகும்”



கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) தலைவர் அண்ணாமலை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் எழுப்பிய கேள்விகளுக்கு வெளியுறவுத்துறை அமைச்சகம் பதில் அளித்துள்ளது.

அந்த ஆவணங்களை அண்ணாமலை வெளியிட்டுள்ளார். மேலும், கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டதற்கு காங்கிரஸ், தி.மு.க. தான் முக்கிய காரணம் என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கச்சத்தீவு விவகாரத்தில் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது. தமிழ்நாட்டின் நலன்களை பாதுகாப்பதற்கு தி.மு.க. எதுவும் செய்யவில்லை என பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில், கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் புதுடெல்லியில் செய்தியாளர்களை திங்கட்கிழமை (01) சந்தித்தார்.

அப்போது அவர் பேசியதாவது,

கடந்த 20 ஆண்டுகளில் இந்திய மீனவர்கள் 6 ஆயிரத்து 184 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். 1 ஆயிரத்து 175 இந்திய மீனவர்கள் படகுகள் இலங்கையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளாக பல்வேறு கட்சிகளால் கச்சத்தீவு விவகாரம் குறித்த கேள்விகள் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டன. அதுதொடர்பான விவாதங்களும் நடைபெற்றன. அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சரும் கச்சத்தீவு குறித்து பல முறை கடிதம் எழுதியுள்ளார். கச்சத்தீவு விவகாரம் குறித்து இப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதங்களுக்கு நான் 21 முறை பதில் அளித்துள்ளேன்.

கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டு அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே கடித பரிமாற்றம் இருந்து வருகிறது. இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்கள் நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

கச்சத்தீவு விவகாரத்தில் தங்களுக்கு எந்தபொறுப்பும் இல்லாததுபோல் திராவிட முன்னேற்ற கழகம் (தி.முக.,) காங்கிரஸ் அணுகுமுறை உள்ளது.

இந்த பிரச்சினையை தீர்க்கும் சூழ்நிலையில் தற்போதைய மத்திய அரசு உள்ளது.

கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்க காங்கிரஸும், பா.ஜ.க.வும் தான் காரணம் என்றார்.

# ‘ஆர்டிஐ’ ஆவணங்கள் சொல்வது என்ன?

கடந்த 1948இல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படும் வரையில் கச்சத்தீவு, இராமேஸ்வரத்தின் ஜமீன்தார் வசம் இருந்தது என்றும் அதன்பிறகு அது மெட்ராஸ் மாகாணத்தின் அங்கமாக மாறியது என்றும் இந்தியா கூறியது. டச்சு மற்றும் பிரிட்டிஷாரின் காலனி ஆட்சி முதலே கச்சத்தீவு தங்கள் வசம் இருந்ததாக கூறிய இலங்கை, குறிப்பாக 1921 முதல் கச்சத்தீவு மீது உரிமை இருப்பதாகக் கோரியது.

இந்த நிலையில், 1974இல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, கச்சத்தீவை இலங்கையின் பகுதியாக அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அப்போது தமிழ்நாட்டு முதல்வராக கருணாநிதி பதவி வகித்தார்.

இந்நிலையில், கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் (ஆர்டிஐ) பெறப்பட்ட ஆவணங்களை தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, ஞாயிற்றுக்கிழமை (31) வெளியிட்டிருந்தார். அந்த ஆவணங்களில் இடம்பெற்றிருக்கும் முக்கியத் தகவல்கள்:

தங்களிடம் அனுமதி பெறாமல் இந்திய இராணுவம் கச்சத்தீவுக்கு வரக்கூடாது என்று கூறிய இலங்கை இராணுவம், 1955இல் கச்சத் தீவில் பயிற்சியில் ஈடுபட்டது.

கடந்த 1960ஆம் ஆண்டில் அப்போதைய அட்டார்னி ஜெனரல் செதல்வாத், கச்சத்தீவு மீது இந்தியாவுக்கே உரிமை உள்ளது என்று தெரிவித்தார்.

கச்சத்தீவு குறித்து 1961இல் நேரு கூறியது: இந்தச்சிறிய தீவுக்கு நான் எந்த முக்கியத்துவமும் தரப்போவதில்லை. கச்சத்தீவு உரிமையை விட்டுக்கொடுப்பதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இந்த விவகாரம் மீண்டும் மீண்டும் பாராளுமன்றத்தில் விவாதிப்பதை விரும்பவில்லை என்றார்.

ஆனால், கே.கிருஷ்ண ராவ் உள்ளிட்ட அதிகாரிகள், கச்சத்தீவுக்கு இந்தியாவுக்கு உரிமை உள்ளது என்று வாதிட்டனர். அதுவே, குண்டேவியா உள்ளிட்ட அதிகாரிகள், கச்சத் தீவு மீதான இந்தியாவின் உரிமை குறித்து சந்தேகத்தை முன்வைத்தனர். அதன்பிறகு தொடர் பேச்சுவார்த்தைக்குப் பிறகு கச்சத்தீவு மீதான உரிமையை விட்டுக்கொடுக்க இந்தியா முடிவு செய்தது.

இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்துவிடக் கூடாது உள்ளிட்ட காரணங்களும் இந்தியா இந்த முடிவுக்கு வந்ததாக கூறப்பட்டது. 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் அப்போதைய வெளியுறவுத் துறை செயலர் கேவல் சிங், மத்திய அரசின் இந்த முடிவு குறித்து அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதியிடம் தெரிவித்தார்.

அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி 1974இல் கச்சத்தீவின் மீதான இலங்கையின் உரிமையை அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். முதலில் 1974இல் ஜூன் 26ஆம் திகதி கொழும்புவிலும், பிறகு ஜூன் 28ஆம் தேதி டெல்லியிலும் கையெழுத்தானது.



# “மன்னிக்க முடியாத துரோகம்”

தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த கச்சத்தீவை இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு, இலங்கைக்கு தாரைவார்த்தது மன்னிக்க முடியாத துரோகம் ஆகும். இதை ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நடத்த நிகழ்வாக கடந்து சென்று விட முடியாது. கச்சத்தீவு அன்று தாரை வார்க்கப்பட்டதன் விளைவுகளை இன்று வரை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டை சேர்ந்த 800க்கும் கூடுதலான மீனவர்கள் இலங்கை படையினரால் கொடூரமாக சுட்டு கொல்லப்பட்டதற்கும், 6,184 மீனவர்கள் கைது செய்யப்பட்டதற்கும், 1,175 மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டதற்கும் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது தான் காரணம். அதற்கு காரணமானவர்களை எந்தக் காலத்திலும் மன்னிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# “பொய் பிரசாரத்தை நிறுத்த வேண்டும்”

கச்சத்தீவு ஒப்படைப்பு விவகாரம் குறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தனது ‘எக்ஸ்’ வலைத்தள பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார். அதில், பல ஆண்டுகளுக்கு முன்பு சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பேசிய வீடியோவையும் இணைத்துள்ளார்.

கச்சத்தீவு விவகாரத்தில் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்ட தகவலை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கெனவே சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோதுதான் கச்சத்தீவு தாரைவார்க்கப் பட்டதாகவும், எனவே, கச்சத்தீவு பற்றி கேள்வி எழுப்ப தி.மு.க.வுக்கு உரிமை இல்லை என்றும் ஜெயலலிதா கூறினார்.

எனவே, கச்சத்தீவு பிரச்சினை குறித்து பொய் பிரசாரம் செய்வதை தி.மு.க. நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

# “10 ஆண்டுகளாக கும்பகர்ண தூக்கம்”

### மோடி மீது ஸ்டாலின் பாய்ச்சல்



பாராளுமன்ற தேர்தல் நெருங்கிவரும் நிலையில், கச்சத்தீவு விவகாரத்தை பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) கையில் எடுத்துள்ளது. கச்சத்தீவு விவகாரத்தில் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க.) இரட்டை வேடம் போடுவதாக பிரதமர் மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி, திங்கட்கிழமை (01) தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

கச்சத்தீவு விவகாரத்தில் தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது. தமிழ்நாட்டின் நலன்களை பாதுகாப்பதற்கு தி.மு.க. எதுவும் செய்யவில்லை. கச்சத்தீவு பற்றிய புதிய விவரங்கள் வெளிப்பட்டுவருவதனால் முற்றிலும் இரட்டை நிலைப்பாட்டை கொண்ட தி.மு.க.வின் வேடம் கலைந்துள்ளது

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கச்சத்தீவு விவகாரத்தில் தேர்தலுக்காக திடீர் மீனவர் பாச நாடத்தை பா.ஜ.க. அரங்கேற்றுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 3 கேள்விகளை எழுப்பியுள்ளார். இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 10 ஆண்டுகளாக கும்பகர்ண தூக்கத்தில் இருந்துவிட்டு, தேர்தலுக்காக திடீர் மீனவர் பாச நாடகத்தை அரங்கேற்றுபவர்களிடம் தமிழ்நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி மூன்றுதான்.

1. தமிழ்நாடு ஒரு ரூபாய் வரியாக தந்தால், ஒன்றிய அரசு 29 பைசா மட்டுமே திருப்பித் தருவது ஏன்?
2. இரண்டு இயற்கைப் பேரிடர்களை அடுத்தடுத்து எதிர்கொண்டபோதும், தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் கூட வெள்ள நிவாரணம் வழங்காதது ஏன்? 3. 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிறப்புத்திட்டம் என ஒன்றாவது உண்டா? திசைதிருப்பல்களில் ஈடுபடாமல், இதற்கெல்லாம் விடையளியுங்கள் பிரதமர் என தெரிவித்துள்ளார்.

சீனா

# 30 இடங்களுக்கு பெயரிட்ட சீனா

அருணாச்சலப் பிரதேசத்தில் இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி 30 இடங்களின் பெயர்களை சீனா வெளியிட்டுள்ளது.




அருணாச்சல் பிரதேச மாநிலத்தை உரிமை கொண்டாடி வரும் சீனா, அந்த மாநிலத்தில் உள்ள 12 மலைகள், 4 நதிகள், ஒரு நிலப்பகுதி உள்ளிட்ட மேலும் 30 இடங்களுக்கு (ஏப்ரல் 01) சீன சிவில் விவகார அமைச்சகம் பெயரிட்டுள்ளது.

அருணாச்சலில் 2017இல் 6 இடங்களுக்கும், 2021இல் 15 இடங்களுக்கும், 2023இல் 11 இடங்களுக்கும் சீனா பெயரிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கராச்சி

# சகோதரி ஆணவ கொலை; தண்ணீர் கொடுத்த தந்தை



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தோபா தேக் சிங் நகரில் வசித்து வரும் நபருக்கு 22 வயதில் மகள் உள்ளார். அவருக்கு இரு சகோதரர்கள் உள்ளனர். இந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் வீட்டில் இரவு வேளையில், படுக்கையறையில் மகள் இருந்தபோது, சகோதரர்களில் ஒருவர் வந்துள்ளார்.

திடீரென அவர் சகோதரியைத் தாக்கி, கழுத்து நெரித்து கொலை செய்துள்ளார். அப்போது, தந்தை பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. மகள் உயிரிழந்தது உறுதியான பின்னர், தந்தை மகனுக்கு தண்ணீர் கொடுத்துள்ளார். இதனை மற்றொரு சகோதரர் வீடியோவாக படம் பிடித்தபடி இருக்கிறார்.

இது தொடர்பில், விசாரணைகளை மேற்கொண்டு, குடும்பத்தினரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த படுகொலைக்கான காரணம் தெரிய வரவில்லை. ஆனால், அடையாளம் தெரியாத நபர் ஒருவருடன் பலமுறை அப்பெண் வீடியோ காலில் பேசியுள்ளார். இதனையடுத்தே இந்த ஆணவக்கொலை செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

பாகிஸ்தான்

# சிவப்பு கம்பளங்களுக்கு தடை

பாகிஸ்தானில் செலவினங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் தேவையற்ற செலவுகளை நிறுத்துவது என அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசு நிகழ்ச்சிகளில் சிவப்பு கம்பளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

பெப்ரவரி 8ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் பின்னர் கூட்டணி ஆட்சி அமைந்தது. இதன்படி, பிரதமராக ஷபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது தலைமையிலான மத்திய அமைச்சரவையில் 16 உறுப்பினர்களுடன் கடந்த 11ஆம் திகதி புதிதாக உருவாக்கப்பட்டது. இந்நிலையில், அரசு நிகழ்ச்சிகளில் சிவப்பு கம்பளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கும் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு நடைமுறையின்படி, வெளிநாட்டுத் தலைவர்கள் வருகையின்போது சிவப்பு கம்பளங்கள் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பூர்

வீடுகளில் வீணாகும் உணவு மூலம்

# குழந்தையின் முகத்தில் காலால் மிதித்து கொலை

திருப்பூரில் இருவர், காதலர்களாக இருந்துள்ளனர். இருவர் வீட்டிலும் எதிர்ப்பு கிளம்பியதால் இருவருக்கும் வெவ்வேறு நபர்களுடன் திருமணம் நடைபெற்றது. அதில் அந்த பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் மகளை முதல் கணவருடன் விட்டு விட்டுக் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கணவரைப் பிரிந்து குழந்தையான மகனோடு திருப்பூர் வந்துள்ளார். அங்குக் காதலருடன் 3 மாதங்களாக வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், குழந்தை அடிக்கடி அழுது கொண்டு இருந்துள்ளது. இதனால் இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. கோபத்தில் இருந்த காதலன் குழந்தையின் தலையைப் பிடித்து சுவரில் அடித்தும், காலால் முகத்தில் மிதித்து அழுத்தியுள்ளார்.



இதில் குழந்தை மயங்கி இறந்தது. எனினும், குளியலறையில் வழுக்கி விழுந்து இறந்து விட்டதைப் போல அக்கம் பக்கத்தினரையும் பொலிஸாரையும் நம்பவைக்க முயன்றுள்ளனர். என்னும் அந்த நாடகம் அம்பலமாகிவிட்டது. இருவரும் கையும் களவுமாகச் சிக்கிக்கொண்டனர்.

கேரளா மாநிலம்

# மாமியாரை எத்தி பந்தாடிய மருமகள்

## வீடியோ எடுத்த கணவன்; மேலாடையை கழற்றிய மனைவி

கேரளா மாநிலத்தில் ஞாயிற்றுக்கிழமை(31) வீடியோ ஒன்று இணையத்தில் வெளியாகி பதற வைத்து வருகிறது. குறித்த வீடியோவை பார்க்கும்போது, நமக்கு ஈரக்குலையே நடுங்கி விடுகிறது.

கேரளா மாநிலம், கொல்லம் மாவட்டத்தில் ஒரு கொடுமை 4 மாதங்களுக்கு முன்பு நடந்தது. ஒரு தம்பதிக்கு 2 குழந்தைகள் இருக்கிறார்கள். கணவின் 80 வயதான அம்மாவும் கூடவே இருக்கின்றார்.

சம்பவத்தன்று, அந்த அம்மா (பாட்டி), கதிரையில் உட்கார்ந்து டி.வி. பார்த்து கொண்டிருந்தபோது, அவர்களின் குழந்தை ஒன்று, தான் உட்காருவதற்கு கதிரை கேட்டது. ஆனால், குழந்தை கேட்பதை



அந்த அம்மா டி.வி. பார்த்தபடியே இருந்தார்.

இதைப்பார்த்த மருமகள், “என்னுடைய மகள் உட்காருவதற்கு கதிரை தரமாட்டியா?” என்று கோபமாக மாமியாரை திட்டி, மாமியாரை, இரு கைகளாலும் பிடித்து கொடூரமாக கீழே தள்ளிவிட்டார். எலும்பும் தோலுமாய் இருந்தவர். தொப்பென்று கீழே விழுந்துவிட்டார். இதனால், கால் முட்டி, கைகளில் பலமாக அடிபட்டது. வலியால் அழுது கொண்டே விரல்களால் தேய்த்து கொண்டார்.

இந்த கொடுமையை வீடியோவாக அவருடைய மகன் எடுத்துள்ளார். தன்னுடைய கணவர் இதை வீடியோ எடுக்கிறார் என்று தெரிந்தும்கூட, அப்பெண் அசரவேயில்லை. மாறாக, தன்னுடைய மேலாடை உயர்த்தி காட்டி, “இப்போது வீடியோ எடு” என்று கெத்தாக நின்றார்.

இதெல்லாமே வீடியோவில் பதிவாகியிருந்தது. ஆதாரத்துடன் நேராக பொலிஸூக்கு சென்றுவிட்டார். 37 வயதான மருமகள் ஒரு பாடசாலையின் ஆசிரியையாம்.




பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் இலங்கை

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், சட்டோகிராமில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த பங்களாதேஷ் விஷ்வ பெர்ணாண்டோ (2), பிரபாத் ஜெயசூரிய (2), அசித பெர்ணாண்டோ (4), லஹிரு குமாரவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஸகிர் ஹஸன் 54, மொமினுல் ஹல் 33 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதையடுத்து, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை, ஹஸன் மஹ்மூட் (4), காலிட் அஹ்மட்டிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்டங்களுடனும், பிரபாத் ஜெயசூரிய நான்கு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 531 ஓட்டங்களை இலங்கை பெற்ற நிலையில், தற்போது 456 ஓட்டங்கள் முன்னிலையில் காணப்படுகின்றது.



பிரெஞ்சு லீக் 1 தொடர்

# மர்ஸெய்யை வீழ்த்திய பரிஸ் ஸா ஜெர்மைன்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், மர்ஸெய்யின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, வித்தின்ஹா, கொன்கலோ றாமோஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நன்டிஸுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நீஸ் தோற்றது.

லீக் 1 புள்ளிகள் பட்டியலில் 62 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பரிஸ் ஸா ஜெர்மைன் காணப்படுகின்றது. 50 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் பிரஸ்டும், 49 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மொனாக்கோவும், 46 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லில்லியும் காணப்படுகின்றது.



ஐ.பி.எல்

# சென்னையை வென்றது டெல்லி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

டெல்லி: 191/5 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 52 (35), றிஷப் பண்ட் 51 (32), பிறித்திவி ஷோ 43 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷ பத்திரண 3/31 [4])

சென்னை: 171/6 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: அஜின்கியா ரஹானே 45 (30), மகேந்திர சிங் டோணி ஆ.இ 37 (16), டரைல் மிற்செல் 34 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: முகேஷ் குமார் 3/21 [3], கலீல் அஹ்மட் 2/21 [4], அக்ஸர் பட்டேல் 1/20 [3], இஷாந்த் ஷர்மா 0/23 [3])

போட்டியின் நாயகன்: கலீல் அஹ்மட்

இதேவேளை, அஹமதாபாத்தில் நடைபெற்ற மற்றைய போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

# சமநிலையில் சிற்றி ஆர்சனல் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பின்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், ஆர்சனலுக்குமிடையிலான போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 67 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 65 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 64 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் சிற்றியும், 59 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் வில்லா ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 02 , ஏப்ரல் 2024, இல. 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.